*2017 ஜுலை 13]*

*முற்பகல் 10–35*

*இரண்டாவது, 2004–ல் 200 கோடி ரூபாயை சுனாமிக்காக அம்மா அவர்கள் கொடுத்தார்கள். நீங்கள் 2006–ல் ஆட்சிக்கு வந்தீர்கள், எவ்வளவு கொடுத்தீர்கள்? 200 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். (குறுக்கீடு) 1,000 கோடி ரூபாய் அல்ல; 200 கோடி ரூபாய்தான் கொடுத்தீர்கள். 200 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். அதாவது, சுண்ணாம்பு கொடுத்ததுபோல் நீங்கள் கொடுத்தீர்கள். அதற்குப்பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்து (குறுக்கீடுகள்) 2011–2016–ல் திரும்பவும் 300 கோடி ரூபாய் செலவு செய்தோம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களில் வாழுகின்ற நம்முடைய மீனவர்களுக்குத் தெரியும். அம்மா அவர்கள்தான் மீனவர்களைக் காக்கின்ற காவல் தெய்வம் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். எனவே, அந்த வரலாற்றை யாரும் மறைக்க முடியாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**195—**

### கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***6204—திருமதி ம. கீதா:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சமென வந்தவருக்குத் தாயாகி நின்றவராம்; விதவிதமாய் திட்டங்களை வீடுதோறும் விதைத்திட்ட வித்தகராம், "மக்களால் நான்; மக்களுக்காகவே நான்; உங்களால் நான்; உங்களுக்காகவே நான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உன்னதக் கோட்பாடோடு தமிழகத்தை ஆற்றல் மிக்க பெண் அரிமாவாய் இருந்து வழி நடத்தி, வங்கக் கடலருகே வற்றாத புகழோடு, மறைந்தும் மறையாது வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, அம்மா அவர்களின் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் அமைதியின் பிறப்பிடம், அன்பின் சிகரம், எடப்பாடி தந்த தவப் புதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவூர் ஒன்றியத்தில் சுமார் 94,640 பேர் வசிக்கின்றனர். இப்பகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் உள்ளன. இதனால் மாணவியர் உயர் கல்வி கற்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கல்லூரி காணியாளம்பட்டியில் அமைக்கப்பட்டால், உடன் வகுப்புகள் தொடங்க கீழ்க்காணும் வசதிகள் உள்ளன. காணியாளம்பட்டி அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 11 வகுப்பறை கட்டடங்கள் காலியாக உள்ளன. மாணவிகள் தங்குவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதி உள்ளது. இங்கு வந்து செல்ல பேருந்து வசதிகள் உள்ளன. இக்கல்லூரி அமைக்க அரசு நிலம், மெயின் ரோட்டில் புல எண் 230/1–ல் 3.23 ஏக்கர், 332/1–ல் சுமார் 1.93 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, காணியாளம்பட்டியில் மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட ஆணை வழங்கிட தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய கரூர் மாவட்டத்திலே ஏற்கெனவே 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 11 சுயநிதிக் கலை மற்றும் அறிவியல்

*2017 ஜூலை 13]*

*கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டு, அரசால் ஒப்பளிக்கப்பட்டிருந்த சேர்க்கை இடங்கள் முழுமையாகப் பூர்த்தியாகவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையில், அந்தப் பகுதியிலே மேலும், பெண்களுக்கென்று ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனியாக வேண்டுமென்று இப்போது கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எதிர்காலத்தில் மாணாக்கர்களுடைய சேர்க்கை கூடுதலாக இருப்பின் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்றைக்குத் தொடர்ந்து அனைவரும் உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

**திருமதி ம. கீதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் 6 தனியார் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஆனால், அரசுப் பொறியியல் கல்லூரிகள் எதுவும் கிடையாது. எனவே, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் ஏழையெளிய மாணவர்கள் அதிகம் உள்ளதால், தனியார் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாத நிலையில் உள்ளனர். அருகிலுள்ள அரசு பொறியியல் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், சேலம், மதுரை, கோவை போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அரசு பொறியியல் கல்லூரியை எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகளிருக்கென்று அரசு கலைக் கல்லூரி ஒன்றையும், அரசு பொறியியல் கல்லூரி ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மறுபரிசீலனை செய்து தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2017 ஜூலை 13*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு பொறியியல் கல்லூரி ஒன்று அவருடைய சட்டமன்றத் தொகுதியில் வேண்டுமென்று கேட்கின்றார். இன்றைக்குப் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கை சதவிகிதம் குறைந்து கொண்டே வருகிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய பொறியியல் கல்லூரிகளிலே அரசால் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இன்றைக்கு அதிகமாக காலியாக இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் பொறியியல் கல்லூரிகளின் தேவை குறைந்துகொண்டே வருகின்றது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கரூர் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லையென்று தெரிவித்து, கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எதிர்காலங்களில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கை கூடுதலாகின்றபட்சத்தில், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

**திருமதி பெ. சீத்தாபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் 60 ஆண்டுகால சாதனைப் பெட்டகம், தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் நம்பிக்கை நாயகர் அண்ணார் தளபதியார் அவர்களையும் வணங்கி என் வினாவைத் தொடுக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட, திண்டிவனம் வட்டம் மற்றும் மரக்காணம் வட்டம் ஆகிய பகுதிகளில் 15–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில், ஒரு வருடத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் மேல்நிலைக் கல்வியை முடித்து வெளிவருகின்றனர். அவர்கள் உயர் கல்வியைத் தொடர வேண்டுமானால், சென்னை, புதுச்சேரி போன்ற பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. அதுவும் தனியார் கல்லூரிகளில்தான் சேர்ந்து படிக்க வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. "எங்களுடைய விழுப்புரம் மாவட்டம், ஏழையெளிய, அடித்தட்டு நிலையிலுள்ள மக்கள் வாழ்கின்ற பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலுள்ள*

2017 ஜூலை 13]

மாணவிகள் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பெற வாய்ப்பு ஏதும் இல்லை'' என்று நான் முன்பே கூறியிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பெண்கள் தான் இந்த நாட்டின் கண்கள்; பெண்களால்தான் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். ஓர் ஆண் பெறுகின்ற கல்வி அவரோடு முடிந்துவிடும்; ஒரு பெண் பெறுகின்ற கல்வி அந்தச் சமுதாயம் முழுமைக்கும் பயன்படும்; அறிவுடைய ஒரு தாய், ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமம்'' என்ற காரணங்களினாலும்,

“பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதற்கே;
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப் பேணுதற்கே;
பெண்களுக்குக் கல்வி வேண்டும் உலகெலாம் பேணுதற்கே;''

என்றான் பாவேந்தன்.

அந்த பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளைக் கருத்திற்கொண்டும், எங்களுடைய பகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். அனைவருக்கும் அளித்த அதே பதிலை எனக்கும் அளிக்காமல், (சிரிப்பு) கண்டிப்பாக எங்களது பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தனது தொகுதியில் குறிப்பிட்ட பகுதியில் கல்லூரி இல்லாத காரணத்தால், அங்கு கல்லூரி வேண்டுமென்று கேட்டார். கரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 2 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன என்ற காரணத்தினால், அங்கே மாணவர்களுடைய சேர்க்கை சதவிகிதத்தைப் பார்த்து அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் கேட்கின்ற இடத்தில், ஒரு அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 3 சுயநிதிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. ஆகவே, திண்டிவனம் கல்லூரியிலே மாணவர்களுடைய சேர்க்கை சதவிகிதம் கூடுகின்றபட்சத்தில்

பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே, 20 சதவிகிதம் மாணவர் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாகக் கொடுக்கப்பட்டு, அனைவரும் உயர் கல்வியைப் பெறுவதற்கான ஒரு சூழ்நிலையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது உருவாக்கித் தந்திருக்கிறது. அதற்கும்மேலாக, அந்தப் பகுதியிலுள்ள மாணாக்கர்கள் என்னென்ன பாடப் பிரிவுகள் படிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, அந்தப் பாடப் பிரிவுகளை முழுமையாக வழங்கியிருக்கிற அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மேலும், இந்த ஆண்டுகூட அவர் சார்ந்திருக்கின்ற திண்டிவனம் பகுதியில் கூடுதலாக எம்.ஏ. (தமிழ்), எம்.எஸ்.சி. (தாவரவியல்), எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.எஸ்.சி. (புவி அமைப்பியல்) என 4 P.G. Group–களை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் இன்றைக்குத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவருடைய தொகுதியைச் சார்ந்த மாணாக்கர்கள், உயர் கல்வியைப் பெறுகின்ற வகையிலே, அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர், அங்கே தனியாக பெண்களுக்கென்று கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில் அங்கே மாணவியர்களுடைய சேர்க்கை அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அதைப்பற்றி அரசானது பரிசீலிக்கும் என்று தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**196—**

## நெல் கொள்முதல் நிலையம்

***2801—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—